| | | | |
|---|---|---|---|
| 29.03.2021 | அசல் வழக்கு எண்.198/2018 | வா .சா.1 | திரு,சண்முகசுந்தரம் த/பெ.சுப்பைய கவுடர் |

சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி (1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில்)

747 காலைக்கு வடக்கே 748 காலை ஒரு சுப்பைய கவுடர் மற்றும் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பூமிகளை தான் 1 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனார் மாதைய கவுடர் கிரையம் வாங்கி அனுபவித்து வந்தார் என்றால், தெரியாது. 748 காலையில் இருக்கும் காலைகள் இன்று வரை யார் பெயரில் உள்ளது யார் அனுபவித்து வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் அனுபவித்து வருவது தெரியும். 1 முதல் 4 பிரதிவாதிகளும் அவர்களுடைய சகோதரியும் சேர்ந்து ஆவண எண். 4842/2014 என்ற ஆவணம் மூலம் காலை 746,747 மற்றம் 748 ஆகிய காலைகளை பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொண்டதற்கான பத்திரத்தை தாக்கல் செய்திருக்கிறேன். அந்த பத்திரத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்தேனா என்றால், காலைகள் நிறைய உள்ளதால் எனக்கு சம்பந்தப்பட்ட காலையை பற்றி மட்டும் தான் தெரியும். அந்த முழு பாகப்பிரிவினை பத்திரத்தை என் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். இதே ஆவணத்தில் 748 காலை மாதைய கவுடருக்கு எப்படி பாத்திய ப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதே ஆவணத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு மேற்படி காலை எப்படி பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றாலும், அந்த விபரங்களை தெரிந்து கொண்டே வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாதைய கவுடருக்கு சொத்தினை விற்ற ஒரு பத்திரப்பன் என்பவர் க.ச எண். 748 ஐ பொறுத்து விற்பனை செய்ததற்கான பத்திரம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால், அந்த ஆவணத்திற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. ஆனால் க.ச எண். 747 ஐ பொறுத்து இந்த

பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் அது தவறான ஆவணம். இந்த பத்திரத்திலேயே 747 ன் கிழபுறத்திலுள்ள தென்வடலாக செல்லும் இட்டேரியின் வழியாக செல்லும் நடந்து கொள்ளும் பாத்தியம் சகிதம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது என்னை கட்டுப்படுத்தாது. 1955 ம் ஆண்டில் இருந்தே தடம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது தவறானது. அதன் பின்னிட்டு சுப்பையனும் கிருஷ்ணப்பனும் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டார்கள் என்றாலும், அவ்வாறு பாகம் பிரித்த சொத்தில் சுப்பையன் 25.06.1955 ம் ஆண்டு ஒரு மாரக்காள் என்பவருக்கு அவருடைய பங்கை பொறுத்து கிரையம் செய்து கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பத்திரத்திலேயே 729/1 வாரி புறம்போக்கில் இருந்துவடக்காக க.ச. 747 காலையில் கிழபுறம் காட்டுக்கு போகும் தடம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் , அது பற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு 1970 ம் ஆண்டில் மேற்படி மாரக்காள் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அந்த சொத்தை கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றாலும், அந்த கிரைய பத்திரத்தை தான் 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் அவர் சகோதரிக்கும் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் (வா சா ஆ 2) குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. மாரக்காள் எழுதிக் கொடுத்த 1970 ம் ஆண்டு பத்திரத்திலேயே க.ச 729/1 வாரி புறம்போக்கில் இருந்து வடக்காக 747 ன் கிழபுறம் உள்ள இட்டேரி வழித்தடத்தை பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு கிருஷ்ணப்பன் அவருக்கு பாத்தியப்பட்ட பாகத்தை பொறுத்து. க.ச. 748 ல் உள்ள ஒரு பாகத்தை 1 முதல் 4 பிரதிவாதிகள் தகப்பனார் மாதைய கவுடருக்கு கிரையம் செய்து கொடுத்திருக்கிறார் என்றாலும் அந்த பத்திரத்திலும் க.ச. 747 ன் கிழபுறமாக உள்ள தடத்தின் வழியாக செல்லும் பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 729/1 என்பது கிழமேலாக அமைந்த வாரி புறம்போக்கு என்றால் 747 க்கு தென்புறமாக கிழமேலாக அமைந்துள்ள பள்ளவாரி புறம்போக்கு ஆகும். வாரிபுறம்போக்கில் 746, 747 மற்றும் 748 காலைகளுக்கும் வாரி புறம்போக்கு வழியாக தான் செல்ல முடியும் என்றால்

சரிதான். 747 வடக்காக 748 ம் 748 க்கு வடக்காக காட்டு பூமி உள்ளது என்றால் சரிதான். மழை காலத்தில் அந்த காட்டு பூமியில் இருந்து தண்ணீர் வாரி புறம்போக்குக்குள் வந்து சேரும் என்றால் சரிதான். மழை பெய்யும் காலத்தில் காட்டில் இருந்து வரும் மழை தண்ணீர் காலை எண்கள் 747 மற்றும் 748 காலைகளின் கிழபுறம 746 காலையின் மேபுறமும் வழிந்தோடி வந்து 729/1 வாரி புறம்போக்கை சென்றடையும் என்றால் சரிதான். வருவாய் ஆவணங்களில் அந்த தடம் நீர் வழித்தடமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு மழைநீர் வழிந்தோடும் நீர் வழித்தடம் தான் க.ச 747 மற்றும் 748 காலைகளின் கிழபுறமாக அமைந்துள்ள பூமிகளுக்கு செல்லும் தடம் என்றால் சரியல்ல. அந்த தடத்தை தான் ஆதி காலத்தில் இருந்து கிரையம் கொடுத்தவர்கள் எல்லோரும் தடம் என்று எழுதி கொடுத்துள்ளார்கள் என்றாலும், அதை தெரிந்து கொண்டே தற்போது தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கரா 37 செண்ட் பூமியை மாரண்ண கவுடர், ராஜேந்திரன் மற்றும் இளங்கோவன் ஆகியோரிடம் இருந்து 1991 ல் கிரையம் பெற்றேன். அவ்வாறு நான் கிரையம் பெற்ற பத்திரத்தில் " தென்வடல் வண்டித்தடத்திற்கும் மேற்கு " என குறிப்பிடப்பட்டிருக்கிறது. காலை எண். 747 என குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால், காலை எண் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. சொத்து விபரத்தில் முதல் வரியில் காலை எண். 747 என குறிப்பிடப்பட்டுள்ளது. செக்கு பந்தியில் குறிப்பிடும்பொழுது காலை எண், 747 க்கு மேற்கே உள்ள தென்வடல் வண்டித்தடம் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால், முதலிலேயே காலை எண் பற்றி சொல்லப்பட்டுள்ளது. தாவா சொத்து விபரத்தில் இரண்டாவதாக சொல்லி உள்ள பி ஷெட்யூல் சொத்துக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரிதான். 1 வது சொத்து விபரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கும் ஆவணம் எதுவும் இல்லை,பட்டா எண். 745 மட்டும் தான். நான் தாக்கல் செய்துள்ள வா சா ஆ,10 பட்டா படி எனக்கு பாத்தியம் இருக்கிறதா என்றால், என் அப்பாவிற்கும் சித்தப்பாவிற்கும் பாத்தியம் இருக்கிறது. வா சா ஆ 10 பட்டாவில் 747/2 என்பது நீர் வழித்தடம் என்று

தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் 748/2 என்பதும் நீர் வழித்தடம் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. எங்கள் பூமிக்கு கிழபுறமாக உள்ள நீர் வழித்தடத்தின் வழியாக 729/1 ல் அமைந்துள்ள வாரி புறம்போக்கிற்கு செல்லமுடியும் என்றால் சரிதான். எங்கள் பூமிக்கு தென்புறமாக உள்ள நிர் வழித்தடத்தை கற்களை போட்டு அடைத்துள்ள தால் மழை நீர் வாரிபுறம்போக்கிற்கு செல்ல முடியாமல் இருக்கிறது என்றால் தவறு. அவ்வாறு நாங்கள் கற்களை போட்டு அடைத்து விட்டதால் பிரதிவாதிகளின் 746 காலையிலுள்ள பிரதிவாதிகளின் பூமியில் தண்ணீர் சேர்ந்து அந்த பூமியை சேதாரப்படுத்துகிறது என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 746 காலையிலுள்ள பூமிகள் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த பூமிகளில் மாதைய கவுடர் உயி ரோடு இருக்கும்போது அவர்கள் கிணறு வெட்டி விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு மாதைய கவுடர் 748 பூமியை கிரைய ம் பெற்ற பின்னர் 746 பூமியிலுள்ள கிணற்றில் இருந்து தான் பைப் போட்டு 748 பூமிக்கு பாய்ச்சி விவசாய ம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு விவசாயம் செய்யும் போது 747/2 748/2 ஆகிய காலைகளின் கிழபுறமாக உள்ள நீர் வழித்தடத்தில் பைப் போட்டு கொண்டு சென்றார்கள் என்றால் சரியல்ல. 747 காலை எப்பொழுது உட்பிரிவு ஆனது என்றால், 1987 க்கு முன்பே உட்பிரிவாகி விட்டது. எங்களுக்கு பட்டா 1987 ல் கொடுத்தார்கள். 748 காலை எப்பொழுது உட்பிரிவானது என்று எனக்கு தெரியாது. 747/2, 748/2 ஆகிய காலைகள் நீர் வழித்தடத்தை உட்பிரிவு செய்து ஏற்படுத்தப்பட்டவை என்றால் சரியல்ல. 747 காலைக்கு கிழபுறம் யார் யார் உள்ளார்களோ 748 காலைக்கு கிழபுறம் யார் யார் இருந்தார்களோ அவர்கள் பெயருக்கு 747/2 748/2 என்று உட்பிரிவு செய்து கொடுக்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 747/2 மற்றும் 748/2 ஆகிய காலை எண்களில் உள்ளது பொதுவான நீர்வழித்தடம் என்றாலும், அது தனிப்பட்ட முறையில் யாருக்கும் பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல. மாதையன் மகன்கள் ரங்கராஜ் , சுப்பைய ன் பத்திரப்பன் மற்றும் நாகராஜன் ஆகியோர் 746, 747 மற்றும் 748 ஆகிய காலையிலுள்ள

பூமிகளை பொறுத்து பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பூமிகளில் ஆவணங்கள் படி அவர்களுக்கு என்ன உரிமை உள்ளதோ அதையே தான் பிரித்து கொண்டார்கள் என்றால் 747 ஐ பொறுத்து அவ்வாறு செய்யவில்லை. 747 பூமியில் நான் மாதைய கவுடருக்கு கிரையம் கொடுத்தது 87 செண்ட் பூமி ஆகும். அதைப்பொறுத்து அவரது வாரிசுகள் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் . மூன்று காலைகளிலும் அவருக்கு பூமி இருக்கிறது என்றாலும் அவற்றை பொறுத்து தான் வாரிசுகள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த மூன்று காலைகளிலும் அவர்களுக்கு என்ன உரிமை இருந்ததோ அதே உரிமையை தான் பாக சாசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்றால், அவர்கள் அவ்வாறு எழுதியிருக்கிறார்கள். நான் கிரையம் செய்து கொடுத்த 87 செண்ட் 1ம் பிரதிவாதிக்கு பாகமாக வந்திருக்கிறது. எல்லா சொத்துக்களையும் கூட்டாக பங்கிடும்பொழுது எல்லா சொத்துக்களின் மீதும் உள்ள உரிமை பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொள்வார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. என் பூமிக்கு வடக்காக ரவிச்சந்திரன் என்பவருக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது. நான் கற்களை போட்டு அடைத்து விட்டதால் மழை நீர் செல்ல முடியாமல் அவர் பூமியிலும் தண்ணீர் தேங்குகிறது என்றால் தவறு. 2ம் பிரதிவாதி பத்திரப்பன் தன்னுடைய பாக பூமியை 6ம் பிரதிவாதி பாலசுப்ரமணியத்திற்கு 2016 ம் ஆண்டு விற்று விட்டார். அதேபோல் 3ம் பிரதிவாதி தன்னுடைய பாகத்தை 5ம்பிரதிவாதிக்கு விற்று விட்டார் என்றால் சரிதான். 5,6 பிரதிவாதிகள் அந்த பூமியை விலைக்கு வாங்கியதற்கு பினனிட்டு தான் நான் பிரச்சினை செய்தேன் என்றால் தவறு. வழித்தடத்தில் மின் கம்பம் மற்றும் பைப் போட முயற்சித்ததால் நான் தடை செய்தேன். அந்த பாதை வழியாக தான் 20 வருடங்களுக்க முன்பாகவே மாதைய கவுடரும் 1 முதல் 4 பிரதிவாதிகளும் தங்களுக்கு பாத்தியப்பட்ட பூமிகளுக்கு பைப் போட்டு தண்ணீர் எடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 5, 6 பிரதிவாதிகள் வெளியூர்க்காரர்கள் என்றால் சரிதான். அவர்கள் வந்த பிறகு அந்த பூமியில் போர்வெல் போட்டு அபிவிருத்தி செய்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு அபிவிருத்தி செய்த போது தான் நான் மின்

கம்பம் பைப் லைன் போடக்கூடாது என்று தடுத்தேன் என்றால், 747/2 பொது வழியில் போடக்கூடாது என்று தடுத்தேன். 747/2 எனக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியமா என்றால் இல்லை. 747 பூமிதாரர்களுக்கு அது பொது வழி ஆகும். அந்த பூமியில் உள்ள மற்ற பூமிதாரர்களும் தடை செய்யவில்லை என்றால், நான் மட்டும்தான் தடை செய்திருக்கிறேன். நான் பாதிக்கப்பட்டதால் தடை செய்தேன். அந்த பாதையை அவர்கள் குறுக்காட்டவில்லை என்றால், மின் கம்பம் போட்டதே இடைஞ்சல் தான். மின் கம்பத்தை பிரதிவாதிகள் போடவில்லை என்றால், நான் தடை விண்ணப்பம் கொடுத்து விட்டேன். பிரதிவாதிகள் எந்த காலத்திலும் மின் கம்பம் போட முயற்சிக்கவில்லை என்றாலும், மின் கம்பம் போட அவர்களுக்கு அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. என் பூமிக்கு வடக்கே நான் போக வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்றால், வண்டிப்பாதை கடைசி வரை இருக்கிறது. அதில் நான் போவேன். என்னுடைய பூமிக்கு வடக்கே எனக்கு வேறு எந்த புமியும் கிடையாது 747/2 ல் கடைசி வரை எனக்கு உரிமை இருக்கிறது. 747/2 என்பது நீர்வழித்தடம்என்றாலும் அதில் நான் எந்த உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல. 5,6 பிரதிவாதிகள் மேற்கண்ட பூமியை கிரையம் பெற்ற பிறகு பொது வழிப்பாதை உபயோகித்தால் எனக்கு பெரும் தொகை கொடுக்க வேண்டும் என மிரட்டினேன் என்றால் சரியல்ல. அவர்கள் வெளியூர்க்காரர்கள் என்பதால் அவர்களை மிரட்டி பணியவைக்க வேண்டும்என நான் அவர்களை மிரட்டினேன் என்றால் ஆதாரமற்ற குற்றச்சாட்டு. ஏற்கனவே பிரதிவாதிகள் பைப் போட்டு நீர் பாய்ச்சி வரும் நிலையில் பைப் போடக்கூடாது என பொய்யான சங்கதிகளுடன் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. 747/2 எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க நான் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

SUB COURT, METTUPALAYAM